கால்வாயைச் சீர்படுத்துவதைப் பொறுத்தவரையில், மாநகராட்சியின் பங்கு எவ்வளவு, நீர்வளத் துறையின் பங்கு எவ்வளவு என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் பங்கிட்டுத் தர வேண்டும். ஏனென்றால், அவர்தான் கார்ப்பரேஷனைப் பார்க்கிறார். எங்கள் பகுதிக்கு வருவதை நான் செய்யத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

221—

நீருந்து நிலையம்

***3997—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்ட நீருந்து நிலையத்தை, பவானி ஆறு கூத்தமண்டியிலிருந்து பவானிசாகர் அணை நீர்த்தேக்கத்திற்கு மாற்றித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைச் சொல்வதற்கு அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள 9 ஊராட்சிகளுக்கு, 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்மூலம் நாளொன்றுக்கு 7.85 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் காரமடை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த, 6 ஊராட்சிகளிலுள்ள 114 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழுள்ள மூலையூர், தலைமை நீருந்து நிலையத்தை பவானி சாகர் அணைக்கு மாற்றித் தருமாறு கோரப்பட்டுள்ளது. மேற்படி தலைமை நீருந்து நிலையத்தில் குடிநீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டதில், குடிநீர் தரஅளவீடுகள்படி குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. மேலும்,

இக்குடிநீரின் தரம் இந்தியத் தரக் கட்டுப்பாடு நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட அளவீடுகளுக்குட்பட்டு உள்ளது. எனவே, இத்திட்டத்தின் கீழுள்ள கூத்தமண்டி நீருந்து நிலையத்தை பவானி சாகர் அணைக்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்தின் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, காரமடை ஊராட்சி ஒன்றியத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள சின்னகள்ளிப்பட்டி, மூடுதுறை, இரும்பறை, இலுப்பநத்தம், பெள்ளேபாளையம், ஜடையம்பாளையம், சிக்கதாசம்பாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு கூத்தமண்டி பகுதியிலிருக்கிற Intake well-லிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு சம்பரவள்ளியிலிருக்கிற சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் என்ன பிரச்சினை என்று சொன்னால், கோடை காலத்தில் பவானி ஆற்றில் நீர்வரத்து மிகவும் குறைந்துவிடுகிறது. மேலும், இக்காலங்களில் பவானி ஆற்றினை ஒட்டியுள்ள ஆலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுநீர் மற்றும் சிறுமுகை பேரூராட்சியை ஒட்டியுள்ள ஊராட்சிகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் பவானி ஆற்றில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் ஒரு கேள்வி உண்டு.

திரு. A.K. செல்வராஜ்: கேள்விக்குத்தான் வருகிறேன். முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான். கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: நீர், மாசடைந்து வருகிறது. கூத்தமண்டி பிரிவில் Intake well அமைத்து அனைத்து ஊராட்சிகளுக்கும் விநியோகம் செய்யப்படுகின்ற இந்த நிலையில், அந்தத் தண்ணீரின் ருசி மாறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன வேண்டும் என்று கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: ஒரு நிமிடம், அதற்குத்தான் வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வருவதற்கு நேரமாகும்.

முற்பகல் 10–15

திரு. A.K. செல்வராஜ்: மூலக் கேள்விக்குத்தான், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் வைத்திருப்பார். ஆகவே, மூலக் கேள்வி கேட்பவர்களுக்கு கொஞ்சம் விரிவாக, நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும். அதுதான் முறை. மேற்படி விநியோகம் செய்கின்ற தண்ணீரின் ருசி குறைகிறது. ஓரிரு நாட்கள் அந்தத் தண்ணீரைச் சேமித்து வைத்தால், தண்ணீர் பசுமையாக, பச்சை colour-ல் மாறி விடுகிறது. அதனால், அதைக் குடிப்பதற்கு மக்கள் அச்சப்படுகிறார்கள். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதை ஒரு நிமிடம் கேட்டுக்கொள்ளுங்கள். தண்ணீர் மாசுபடுகிறது என்று சொல்லிவிட்டீர்கள்; புரிந்துவிடுமல்லவா!

திரு. A.K. செல்வராஜ்: ஒரேயொரு நிமிடத்தில் நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவித்தது, தாசில்தார் அவர்களிடம் தெரிவித்ததையெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அப்போதுதான் இதற்கு விடை கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. A.K. செல்வராஜ்: அதைத்தான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேட்டுப்பாளையத்திலிருந்து வருவதற்கு நேரமாகும்.

2023 அக்டோபர் 11]

திரு. A.K. செல்வராஜ்: மாவட்ட ஆட்சித் தலைவர், குடிநீர் வடிகால் வாரியத் துறையின் அதிகாரிகள், பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஆகியோரை அழைத்து வந்து, நேரடியாக ஆய்வு செய்து, அந்த intake well-ஐ வேறு இடத்தில் மாற்றித் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி intake well-ஐ மேட்டுப்பாளையத்தின் மேற்பகுதியில் உள்ள விளாம்பரத்தூர் பகுதியில் அமைக்க நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை, ஏற்கெனவே ஒன்றிய அரசினுடைய தரக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் ஆய்வு செய்து, குடிநீர், மக்கள் அருந்துவதற்கு உரிய தரத்துடன் இருக்கிறது என்று சொல்லி இருக்கிற காரணத்தால், அதை மாற்றத் தேவையில்லை என்று அதிகாரிகள் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு தண்ணீர் மிகவும் மாசடைந்துள்ளது என்று சொல்லி இருக்கிற காரணத்தால், மீண்டும் அதிகாரிகளை அனுப்புகிறோம். இல்லையென்றால் நாங்களே நேரடியாக வந்து பார்த்து அப்படி மாற்றித்தான் அமைத்துத்தர வேண்டுமென்றால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதற்குரிய ஏற்பாடுகளை நிச்சயமாகச் செய்யலாம். ஏனென்றால் மக்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் உகந்ததாக இருக்க வேண்டும். அதைச் செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில், கூடலூர் நகராட்சி புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற நகராட்சி. இந்தக் கூடலூர் நகராட்சிக்கு, பில்லூர் குடிநீர் திட்டத்தின் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்ட காரணத்தாலே அப்பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு 110 லிட்டர் குடிநீர் வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, மேட்டுப்பாளையம் நகராட்சி, பெரியநாயக்கன்பாளையம்

பேரூராட்சி, பிலிச்சி ஊராட்சி, நாயக்கன்பாளையம் ஊராட்சி அதேபோல, வீரபாண்டி பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு பில்லூர் குடிநீர் திட்டத்தின் மூலமாக வழங்கக்கூடிய குடிநீர் அளவு மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இப்பகுதிகளை இணைத்து ஒரு புதிய குடிநீர் திட்டம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பில்லூர்-1, பில்லூர்-2 சிறுவாணி ஆகிய நீர் ஆதாரங்களிலிருந்து ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தினுடைய அனைத்துத் தொகுதிகளுக்கும் தினந்தோறும் 304* MLD *தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இதிலே 191* MLD *மாநகராட்சிக்கு மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. வழியில் வருகிற கிராமங்களுக்கு 113* MLD *கொடுக்கப்பட்டு வருகிறது. இன்றுவரை தண்ணீர் வழங்கப்பட்டு வருகிற அளவு அதுதான். ஆனால், இன்னும் 20 நாட்களுக்குள்ளாக பில்லூர்-3 ஆவது திட்டம் துவங்கப்படவுள்ளது. அதன்மூலம் 178* MLD *புதிதாக வர இருக்கிறது. ஆனால், கோவை மாநகராட்சிக்குத் தேவையான அளவு, இன்னும் ஒரு 155* MLD*; அதுவும் 24X7 தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய 23* MLD *தண்ணீரை அருகில் இருக்கின்ற பேரூராட்சி, நகராட்சிகளுக்கு கொடுப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டு இருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒப்புதல் கேட்டு அனுப்பி அனுமதியைப் பெற்று, அந்தப் பேரூராட்சி, நகராட்சிகளுக்கு தண்ணீர் வழங்கும் பணி துவங்கப்பட இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, மேட்டுப்பாளையம், காரமடைப் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது என்பது தெரியும். எனவே, அங்கு தண்ணீர் கொண்டுவர தேவையான அனைத்து ஏற்பாடுகளும் நிச்சயமாக செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

2023 அக்டோபர் 11]

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதியில், புழல் ஏரியும், சோழவரம் ஏரியும் உருவாகி சென்னை மாநகருக்குக் குடிநீர் ஆதாரமாகத் திகழ்ந்துகொண்டு இருக்கின்றன. அதிலே, 4 TMC தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. ஆனால், பெருகிவரும் மக்கள் தொகையின் காரணமாக அங்கே வசிக்கின்ற மக்களுக்கு போதுமான அளவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே, ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கித் தர முடியுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்திலிருந்துதான் 3, 4 ஏரிகளிலிருந்து முழுமையாக சென்னைக்குக் குடிநீர் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். ஆனால், அங்கு சென்றபோது, திருவள்ளூர் மாவட்ட மக்கள், 'இங்கிருந்து குடிநீர் செல்கிறது. ஆகவே, எங்களுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டம் தேவை' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குத்தான் நேற்று பதில் சொல்கிறபோதே சொன்னேன். இன்னும் 7, 8 மாதங்களில் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து கூடுதலாக 250 MLD எடுக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். அப்படி கிடைக்கின்றபோது, ஒரு பகுதி pipeline மட்டும்தான் போட வேண்டியிருக்கும். புது குடிநீர் திட்டம் தேவையில்லை. Pipeline connection கொடுத்தாலே திருவள்ளூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான பகுதிகளுக்கு, தண்ணீர் வசதி கிடைக்கும். அதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. ப. அப்துல் சமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் எனது கோரிக்கையை ஏற்று, என்னுடைய மணப்பாறை தொகுதிக்கு சாலைகள், மருத்துவமனை கட்டடம், மழைநீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்காக 50 கோடி ரூபாய் நிதி

ஒதுக்கியதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய மணப்பாறை தொகுதி, காவிரி பாயக்கூடிய திருச்சி மாவட்டத்தில் இருந்தாலும் வெள்ளப்பெருக்கு காலத்தில்கூட காவிரி நீர் வராத ஒரு மேட்டுப் பகுதியாக மணப்பாறை தொகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்குக் குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்பட்ட காலத்தில் 1996–ல், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் அந்த மக்களுக்குக் குடிநீரை வழங்கினார்கள். அதை இந்த நேரத்தில் நான் நன்றியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். 27 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவர் போட்டுக் கொடுத்த அந்தக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு இன்றைக்குக் குடிநீர் கிடைக்காமல் அந்தப் பகுதி மக்கள் அவதிப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. மணப்பாறை நகரத்திற்கு மட்டும் 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகள், மறுசீரமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மருங்காபுரி, வையம்பட்டி, மணப்பாறை ஒன்றியம், பொன்னம்பட்டி பேரூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிற காரணத்தால் மிகப் பெரிய பிரச்சினை இருக்கிறது. எனவே, என்னைவிட எனது தொகுதியைப்பற்றி நன்கறிந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இதைச் சீர்செய்து தருவார்களா என்று கேட்டு நிறைவு செய்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்கள் சொன்னது, ஏற்கெனவே தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு இருந்தபோது 10.10 கோடி ரூபாய் செலவிலே, மணப்பாறை நகரம், மணப்பாறை பகுதி முழுவதற்கும் குடிநீரைத் தந்தார்கள். மற்ற தொகுதிகளைக் காட்டிலும் 900 hamlets இருக்கின்ற பகுதி அது. 900 குக்கிராமங்கள் அடங்கிய பகுதி. அன்றைக்கு மருங்காபுரி தொகுதி என்று பெயர் இருந்தது. அந்த அனைத்துப் பகுதிகளுக்குமே குடிநீரைக் கொண்டுவந்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அன்றைக்குத் தந்தார்கள். தற்போது 27 ஆண்டுகாலம் ஆகிவிட்ட காரணத்தால், ஆங்காங்கே பழுதுகள், road extension

2023 அக்டோபர் 11]

செய்யும்போது பல இடங்களிலே pipeline *உடைந்திருக்கின்றன. எனவே, அவற்றை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 17.8 கோடி ரூபாய் அதற்காக நிதியொதுக்கி பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே,* retrofitting *மூலமாக அனைத்துக் குழாய்களும் மாற்றப்பட இருக்கின்றன. நீங்கள் ரோடுக்குப் போனீர்களென்றாலே தெரியும். குழாய்களெல்லாம் அங்கே கிடப்பதைப் பார்த்தீர்களென்றால் தெரியும்; வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவிலே அந்தப் பணிகளை முடித்து குடிநீர் தருகிற பணியை நாங்கள் செய்யவிருக்கிறோம். இதனுடைய வரலாறு என்னவென்று சொன்னால், முதலில் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது ஒரு திட்டம் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் கொண்டுவந்தபோது மணப்பாறைக்கு குழாய்கள் போடப்பட்டன. ஆனால், அந்தக் குழாய்கள் முழுவதும் உடைந்துவிட்டன. மீண்டும் கலைஞர் அவர்கள் வந்துதான் மணப்பாறை நகரத்திற்கே புதிய குழாய்களைப் போட்டுக் கொடுத்தார்கள். அன்றைக்குக் கலைஞர் தந்தார். இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17.8 கோடி ரூபாயிலே குழாய்கள் மாற்றப்பட்டு வருகின்றன. விரைவிலே அவை சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோகனூர் ஒன்றியம், நாமக்கல் ஒன்றியம் மற்றும் சேந்தமங்கலம், எருமப்பட்டி, பரமத்தி, கபிலர்மலை ஆகிய ஒன்றியங்களை உள்ளடக்கிய மோகனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஜல் ஜீவன் திட்டத்தின்மூலமாக* estimate *தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்தப் பகுதிகளிலே அதிகளவில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதால், இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஒட்டுமொத்த மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையும் பூர்த்தியாகிவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1,400 கோடி ரூபாய் செலவில் 'ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆலம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அந்தத் திட்டம் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது. மோகனூர் பகுதி, திருச்சியை ஒட்டிய பகுதிகள் என அத்தனை இடங்களுக்கும் குடிநீர் தருவதற்காக DPR தயாரிக்கப்பட்டு, நிதித் துறையின் அனுமதிக்காக காத்திருக்கிறோம். விரைவிலே நிதி கிடைத்தவுடன் இத்திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார் அவர்கள்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதிக்குட்பட்ட பெருந்துறை SIPCOT 2,700 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இங்கே அதிகளவில் dyeing factories உள்ளன. அதனைச் சுற்றியுள்ள கிராமங்கள் ஈங்கூர், வரப்பாளையம், பணியம்பள்ளி, கம்பளியம்பட்டி, வாய்ப்பாடி, பொன்முடி, பெருந்துறை பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு, குறிப்பாக, வாய்ப்பாடி ஊராட்சியில், குடிநீர் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததல்ல என்று மாவட்ட குடிநீர் வழங்கல் அலுவலகம் சான்றளித்துள்ளது. TDS அளவு சுமார் 3,000 முதல் 7,000 அளவுகளில் உள்ளது. இப்பகுதி மக்கள் பெரும்பாலானோர் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி செய்வதை தங்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார், உங்களுக்கு என்ன வேண்டும்? பால் வேண்டுமா, தண்ணீர் வேண்டுமா? (குறுக்கீடு) தண்ணீரைச் சொல்லுங்கள்.

திரு. S. ஜெயக்குமார்: தற்போது வழங்கப்படுகின்ற தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால் கால்நடைகள் பெரிதும் பாதிப்படைகின்றன. இப்பகுதி மக்கள் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற சுற்றியுள்ள கிராம மக்களுக்கு அதிகப்படியான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

2023 அக்டோபர் 11]

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே இது தெரியும், பெருந்துறையில் ரூ.224 கோடி செலவில், கொடிவேரி அணையிலிருந்து பெருந்துறைக்கு மட்டும் 27* MLD *நீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கால்நடைகளுக்கு தண்ணீர் வேண்டும் என்கிறார்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மனிதர்களுக்கு தண்ணீர் தருகிறோம் என்று சொல்கிறேன். (சிரிப்பு) 27* MLD *நீர் வந்து கொண்டிருக்கிறது. அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தவும் வாய்ப்புள்ளது. புதிய திட்டம் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்தி மற்ற கிராமங்களுக்கும் நீர் செல்லும் வகையில் புதிய திட்டம் மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

மாணவர் விடுதி

***75408—திரு. எம்.ஆர். காந்தி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?